

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2048 | ஜனவரி 04, 2018 | புரட்சி 16 | முழக்கம் 51 | விலை: ரூ.3.00


## சேலத்தில் கூடிய கழகச் செயலவை முடிவுகள்

# மாணவர்களிடையே விழிப்புணர்வு இயக்கம்

சமூக நீதி மறுக்கப்பட்டு, கல்வி வேலை வாய்ப்புகளை இழந்து, இருண்ட எதிர்காலம் நோக்கிச் செல்லும் தமிழ்நாட்டின் ஒடுக்கப்பட்ட சமுதாய மாணவர்களிடையே விழிப்புணர்வை ஊட்டி, அவர்களின் உரிமைப் போராட்டத்துக்கு தயார் செய்யும் பரப்புரை இயக்கங்களைத் தொடங்க சேலத்தில் கூடிய கழகச் செயலவை முடிவு செய்தது. கல்லூரிகள் மாணவர் விடுதிகளில் இந்த ஆபத்துகளை ஆதாரங்களோடு விளக்கும் வெளியீடு, துண்டறிக்கைகளை தயார் செய்து, மாணவர்களிடம் வழங்கவும் முடிவு செய்யப்பட்டது. தமிழ்நாடு மாணவர் கழகத்தின் இந்த செயல் திட்டத்துக்கு கழகப் பொறுப்பாளர்கள் முழுமையாக அனைத்து உதவிகளையும் வழங்குவது எனவும் தலைமைக்குழு முடிவு செய்தது.




29122017 வெள்ளியன்று, சேலம் விஜய ராகவாச்சாரி அரங்கில் நடைபெற்ற திராவிடர் விடுதலைக் கழகச் செயலவையில் இயற்றப் பட்டத் தீர்மானங்கள்.

சமூக நீதிக் கொள்கைகளால், கல்வி, வேலை வாய்ப்புகளில் இந்தியத் துணைக் கண்டத்துக்கே வழிகாட்டிய தமிழ்நாடு இன்று மோசமான நிலையில் பின்னடைந்து, தமிழக இளைஞர்களின் எதிர் காலத்தையே கேள்விக்குள்ளாக்கி இருக்கிறது. மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சகம் நாடாளு மன்றத்தில் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் தமிழ் நாட்டின் வேலையில்லாத் திண்டாட்டம், இந்தியா சராசரியைவிட அதிகமாகிவிட்டது என்றும், வேலை வாய்ப்புகளை வழங்கக்கூடிய புதிய தொழிற்சாலைகள் எதுவும் தொடங்கப்படாததே காரணம் என்றும் கூறியுள்ளது

இந்த நிலையில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், மாநில அரசுப் பணி நியமனங் களுக்கு, இந்தியாவின் அனைத்து மாநிலத்தினரும், நேபாளம், பூட்டான் நாட்டவரும், வெளிநாடுகள் பலவற்றிலிருந்து நிரந்தரமாக குடியமரும் நோக்குடன் இந்தியா வந்துள்ளோரும் - தமிழ்மொழி தெரியா தோரும் விண்ணப்பிக்கலாம் என்று அறிவித்துள்ளது

தமிழ்நாடு அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரி களுக்கு விரிவுரையாளர் பணிக்கு தேர்வு செய்யும் தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம் பிற மாநிலத்தவர் களுக்கு பணி நியமன ஆணை வழங்கியுள்ளது (தற்போது தேர்வில் நடந்த ஊழல்கள் காரணமாக தேர்வுகள் இரத்து செய்யப்பட்டுள்ளது)

தமிழ்நாடு நுழைவுத் தேர்வை இரத்து செய்து, தனக்கான சமூகநீதிக்கொள்கையைப் பின்பற்றி வந்த நிலையில், மத்திய அரசு சிபிஎஸ் பாடத்திட்டத்தின் கீழ், நுழைவுத் தேர்வைத் திணித்து, மாநில அரசுப் பாடத் திட்டத்தின் கீழ் பயின்றுவரும் 85% மாணவர்களின் மருத்துவக் கல்விக்கு முட்டுக்கட்டை போட்டுவிட்டது

கடந்த பல ஆண்டுகளாக, மத்திய அரசுப் பணியாளர் தேர்வையும், மண்டல அளவில் நடந்து வந்த முறையை இரத்துசெய்து இந்திய அளவில் பொதுத் தேர்வுமுறையை நுழைத்து, தமிழ்நாட்டு மத்திய அலுவலகங்களில் தமிழர்கள் எண்ணிக்கையை மிக மோசமான அளவுக்குக் குறைத்துவிட்டது

மேலும், இந்தியா விடுதலை பெற்றதாகக் கூறப் பட்டதன் பின்னர் 45 ஆண்டுகள் மத்திய அரசுப் பணி களில் இட ஒதுக்கீடு இல்லாதிருந்த பிற்படுத்தப்பட்ட சமூகத்தினருக்கு, தமிழ்நாட்டில் வழங்கப்பட்டு வரும் இட ஒதுக்கீட்டில் பாதியளவான 27% வழங்கப்பட்டு, 24 ஆண்டுகள் கடந்த நிலையிலும், அதில் பாதியளவு கூட நிரப்பப்படாத நிலையே உள்ளது

தமிழ்நாட்டின் நீண்ட நெடுங்காலமாக பின்பற்றப் பட்டு வந்த சமூக நீதிக் கொள்கைகளால் ஓரளவேனும் பலன்பெற்று முன்னேறிவரும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, பழங்குடி சமூகங்களைச் சேர்ந்த மாணவர்களும், இளையோரும் எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளை விளக்கி துண்டறிக்கை, சிறுவெளியீடு களுடன் தமிழகம் முழுதும் கல்விக் கூடங்களிலும், விடுதிகளிலும் சந்தித்து செய்திகளைப் பரப்பவும், அணி திரட்டுவதுமான முன்னெடுப்புகளைச் செயல் படுத்தவுள்ள தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு தமிழ்ச் சமூகத்தை செயலவை கோருகிறது

**பா.ஜ.க.வின் நிழல் ஆட்சி**

மத்திய பாஜக ஆட்சி தனது அதிகாரக் கொடுங் கரங்களால் தமிழ்நாட்டின் நிர்வாகத்தில் நேரிடையாகத் தலையிடுவதும், தமிழ்நாட்டில் தற்போது ஆட்சியிலிருக்கும் அஇஅதிமுக அரசு பாஜக ஆட்சிக்குப் பணிந்து போய் தமிழகத்தின் உரிமைகளை பறித்துக் கொள்ள அனுமதிப்பதும் நடைபெறுவது மிக


(4ஆம் பக்கம்)


### வெளியீட்டு செயலாளர் இராம. இளங்கோவன் கழகக் கட்டமைப்புக்கு 1 இலட்சம் நன்கொடை

சேலத்தில் நடந்த கழக செயலவைக் கூட்டத்தில் கழகக் கட்டமைப்பு நிதிக்காக வெளியீட்டு செயலாளர் இராம. இளங்கோவன் ரூபாய் ஓர் இலட்சம் நன்கொடையை கழகத் தலைவரிடம் பலத்த கரவொலிக் கிடையே வழங்கினார்.

## சேலம் தீர்மானம் எதிரொலி: களப்பணியைத் தொடங்கினர் நாமக்கல், ஈரோடு கழக மாணவர்கள்



ஈரோட்டில் டிசம்பர் 16 ஆம் தேதி கூடிய தலைமைக் குழு தீர்மானங்களை செயல்படுத்த உடனடியாக களமிறங்கினர். நாமக்கல் ஈரோடு மாவட்டக் கழகத் தோழர்கள், நாமக்கல், ஈரோடு மாவட்டங்கள் சார்பில் மாணவர்கள் சந்திப்பு, திருச்செங்கோடு பெரியார் மன்றத்தில் 31.12.2017 அன்று காலை 11:30 மணிக்கு தொடங் கியது. நிகழ்வில், ராசிபுரம், மல்லசமுத்திரம், பவானி, திருச்செங்கோடு போன்ற பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் கலந்து கொண்டனர்.

மனோஜ் தலைமை வகிக்க, தோழர்கள் வே.ஜீவிதா மற்றும் நித்யா முன்னிலை வகிக்க மாணவர்கள் கலந்துரையாடல் தொடங்கியது. மாணவர்களிடையே, நீட், தமிழ்நாடு தேர்வாணையத்தின் தமிழர் விரோத போக்கு, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கான உதவித்தொகை குறைப்பு போன்றவைகளைப் பற்றி விரிவான கலந்துரையாடல் நடைபெற்றது. கலந்து கொண்ட புதிய மாணவர்கள் தங்களுடைய கருத்துக்களை தெரிவித்தனர்.

கலந்துரையாடலுக்குப் பின், சமூக வலைதளங்களில் மாணவர்கள் பிரச்சனைகளை பரப்புதல், கல்லூரி நுழைவாயிலில் காலை நேரங்களில் (வாய்ப்பைப் பொறுத்து) துண்டறிக்கைகளை கொடுத்தல், துறை சார்ந்த மாணவர்களின் பிரச்சனைகளுக்கு ஏற்றவாறு துண்டறிக்கைகளை தயாரித்தல், களத்தில் செயல்படுகின்ற மாணவர்களுக்கு பயிற்சி வகுப்புகள் மற்றும் கருத்தரங்கங்கள் நடத்துதல், கல்லூரி வாயில்களில் தெரு முனைக்கூட்டங்கள், வீதி நாடகங்கள் நடத்துதல், மண்டல மாநாடுகளை நோக்கி மாணவர்களை அணி திரட்டல் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இறுதியாக தோழர் கவுதம் நன்றியுரையாற்றினார்.

நிகழ்வு தொடங்கும் முன், மல்லை ஒன்றிய பொறுப்பாளர் கண்ணன் மறைவுக்கு வீரவணக்கம் செலுத்தப்பட்டது.

# கீழ்வெண்மணி படுகொலை : பெரியார் மீது குறை கூறுவோருக்கு பதில்

## — தியாகு —

*கீழ்வெண்மணி படுகொலையின்போதுபெரியார் அமைதி காத்தார் என்ற குற்றச்சாட்டை மறுத்து தியாகு தனது முகநூலில் வெளியிட்டுள்ள பதிவு:*

கீழ்வெண்மணி படுகொலையின்போது பெரியார் ஆதிக்கச் சாதி மக்களுக்கு ஆதரவாக அமைதி காத்தாரா?

இதற்கான பதிலைத் தெரிந்து கொள்ளும் முன் முதுகுளத்தூர் கலவரத்தின் போது பெரியாரின் நிலைப்பாட்டையும் தெரிந்து கொள்ள வேண்டும். கலவரச் சூழல் குறைய முத்துராம லிங்கம் கைது செய்யப்பட வேண்டும் என வெளிப்படையாக ஆதிக்கச் சாதியினரை எதிர்த்து பாதிக்கப்பட்ட தலித் மக்களுக்கு ஆதரவு அளித்தார் பெரியார்.

கீழ்வெண்மணியில் ‘திராவிட விவசாயத் தொழிற்சங்கம்’ சங்கம் என்ற அமைப்பு திராவிடர் கழகத் தோழர்களால் நடத்தப்பட்டு வந்தது. சாணிப்பால்,சவுக்கால் அடித்தது போன்ற வன்கொடுமைகளை திராவிடர் கழகம் எதிர்த்தது. கம்யூனிஸ்ட்டுகளும் எதிர்த்தனர். கூலி, குத்தகை, அவர்களின் வாழ்க்கைத் தரம், அவர்களுக்கு கல்வி போதிப்பது என அனைத்துக் களங்களிலும் திராவிடர் விவசாய தொழிலாளர் சங்கம் இயங்கியது. அவர்களுக்கானக் கொள்கைகளை விளக்கி ‘விடுதலை’ சார்பாக சிறிய புத்தகமும் வெளியிடப்பட்டது.

கம்யூனிஸ்ட் கட்சியால சாதிக்க முடியாததை, அவர்கள் இவ்வளவு காலம் போராடியும் செய்யமுடியாததை இராஜாஜி ஆட்சி காலத்தில் பெரியார் செய்தார். அது ‘தஞ்சை ஜில்லா பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம்‘ . அன்று பண்ணையாளுக்கு எந்த பாதுகாப்பும் கிடையாது. ஒரு நாள் காலையில் வேலைக்கு போனால் மறுநாள் வேலைக்கு வேண்டாம் என்று சொல்லி விடுவார்கள். வேலைக்கு எந்த உத்திரவாதமும் கிடையாது. அப்படி வேலை திடீரென மறுக்கப்பட்டால் இழப்பீடு கொடுக்க வேண்டும் என்று அந்த சட்டம் உறுதி செய்தது. அது ஒரு பெரிய பாதுகாப்பாக பண்ணையாளுக்கு வந்தது. அது பெரியாரின் கோரிக்கையால், திராவிட விவசாய தொழிலாளர் சங்கத்தின் போராட்டத்தால் கிடைத்தது.

டிசம்பர் 25,1968 இரவு கீழ்வெண்மணியில் கலவரம் நடந்தது 44 பேர் உயிரோடுக் கொளுத்தப்பட்ட போது பெரியார் உடல் நலம் மோசமாகி சென்னை பெரிய மருத்துவமனையில் சிகிச்சை செய்துவந்தாரென்பது டிசம்பர் 27, 29 தேதிகளிட்ட விடுதலை நாளேட்டின் பக்கங்களில் ஆசிரியர் கி. வீரமணி எழுதிய குறிப்புகளின் வழியாக அறியப்படுகிறது. எனவே உடனடியாக பெரியார் எந்த அறிக்கையும் கொடுக்கவில்லை. ஆனால் பிறகு ‘கீழ்வெண்மணியைத் தடுப்பது எப்படி?’ என்றத் தலைப்பில் இரண்டு அறிக்கைகளை எழுதினார். 12.1.1969 அன்று செம்பனார் கோவிலில் நடந்த கூட்டத்தில் கீழ்வெண்மணி கலவரம் பற்றி பேசுகிறார். பொதுவாக கூலி உயர்வுப் போராட்டங்களை பெரியார் ஆதரிக்கவில்லை. தொழிலாளர்கள் பங்குதாரர்கள் ஆவதுதான் முக்கியம் என்பதே பெரியாரின் நிலைப்பாடு. “எந்தக் காரணத்தை முன்னிட்டாவது பாடுபடும் மக்கள் நிலை தாழ்ந்திருக்கவும் பாடுபடாத மக்கள் நிலை உயர்ந்திருக்கவும், ஆதிக்கம் செலுத்தவும் கூடாது என்பதுதான் தொழிலாளர்கள் கிளர்ச்சியின் முக்கியத்துவமாய் இருக்க வேண்டும். அப்படிக்கில்லாமல், ஏதோ 2 அணா 4 அணா கூலி உயர்த்தப்படுவதற்காகப் போராடுவதென்பது பயனற்றதேயாகும். ஏனெனில் நமது கிளர்ச்சியில் 2 அணா கூலி உயர்த்தித் தருவானேயானால், தொழிலாளிகளால் செய்யப்படும் சாமான்களின் பேரில் முதலாளிகள் ஒன்று சேர்ந்து நாலணா விலை அதிகப்படுத்திவிடுவார்கள். அந்த உயர்ந்த விலையைக் கொடுத்துச் சாமான் வாங்க வேண்டியவர்கள் தொழிலாளிகளேயாவார்கள். ஆகவே, முதலாளிகள் தொழிலாளிகளுக்கு வலது கையில் கூலி அதிகம் கொடுத்து, இடது கையில் அதைத் தட்டிப் பிடுங்கிக் கொள்வார்கள். முதலாளிகளுடன் கூலித்தகராறு என்பது முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் இடையில் உள்ள புல்லுருவிக் கூட்டமான தரகர்களுடைய சூழ்ச்சியாகும்” (குடிஅரசு 01.10.1933).

"நிலங்கள் அனைவருக்கும் பிரித்தளிக்கப்பட வேண்டும்; விவசாயத்தில் ஈடுபட்ட கூலியாட்களுக்குக் கூலி தவிர விவசாயத்தில் ஒரு பங்கு இருக்கும்படிச் செய்ய வேண்டும்” - “(பகுத்தறிவு - 2.12.1934)

"முதலாளிக்கு ஏற்படும் இலாபத்தில் தொழிலாளர்களுக்குப் பங்கும் நிர்வாகத்தில் உரிமையும் வேண்டும்" -1944-ஆம் ஆண்டு சேலம் மாநாட்டுத் தீர்மானம்.

இந்த அடிப்படையிலேதான் போராட்டத்தை முன்னிருந்து நடத்திய கம்யுனிஸ்ட் கட்சியை விமர்சித்தார். இருந்தாலும் திராவிடர் கழகத்தினரும், கம்யுனிஸ்ட் கட்சியினரும் கீழ்வெண்மணி மக்களுடன் தொடர்ந்து இயங்கி வந்தனர். இது தொடர்பான சட்ட நடவடிக்கைக்குப் போராடி வந்தனர்.

கலவரத்தைப் பற்றி விசாரிக்க தனி நபர் கமிஷன் போட்டிருந்தார் அன்றைய முதல்வர் அண்ணா. அதற்கு கணபதியா பிள்ளை கமிஷன் என்று பெயர். திராவிட விவசாய தொழிலாளர் சங்கம் சார்பில் நிறைய தோழர்கள் சாட்சியம் சொன்னார்கள்.

கீழ்வெண்மணியை சார்ந்த முனியன் என்பவர் கீவளூர் காவல்நிலையத்தில் அளித்த புகாரின் அடிப்படையில் குற்ற எண்:327/68ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. இச்சம்பவம் தொடர்பாக கோபால கிருஷ்ண நாயுடு உட்பட 106-பேரை காவல் துறை கைது செய்தது. கைதானவர்களில் அதிகம் பேர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள். முக்கியக் குற்றவாளியான கோபாலகிருஷ்ண நாயுடுவுக்கு 1970-இல் நாகப்பட்டினம் அமர்வு நீதிபதி குப்பண்ணா 10-ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனை விதித்தார்.

இத்தீர்ப்புக்கு எதிராக கோபால கிருஷ்ண நாயுடு சென்னை உயர்நீதிமன்றத்தில் தான் நிரபராதி என்று மேல் முறையீடு செய்தார். 4-வருடங்கள் 3-மாதங்களாக விசாரணையில் இருந்த வழக்குக்கு 1975-ஏப்ரல் 6-ஆம் தேதி தீர்ப்பு சொல்லப்பட்டது. சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்த மகராஜன் கோபால கிருஷ்ண நாயுடு மீது எந்த குற்றமும் நிரூபிக்கப்படவில்லை என்று கூறி விடுதலை செய்வதாக தீர்ப்பளித்தார்.


கவனிக்க: பெரியார் 1973 டிசம்பரில் இறந்துவிட்டார். அவருக்கு கோபால கிருஷ்ண நாயுடு கீழ் நீதி மன்றத்தில் தண்டனை பெற்றதும், மேல் முறையீடு செய்ததும், ஜாமீனில் வெளி வந்ததும் மட்டுமே தெரியும். மேல் முறையீட்டு விடுதலை அவரின் மறைவுக்குப் பின். எனவே கோபால கிருஷ்ண நாயுடுவுக்கு அவர் ஆதரவளித்தாகச் சொல்வது எங்குமே பொருந்தாது. இன்னொரு முக்கிய விசயம். ஜாமீனில் வெளிவந்த கோபால கிருஷ்ணன் கீவளூர் வந்திருந்த பெரியாரை சந்திக்க முயன்ற போது பெரியார் “ என் கிட்ட என்ன சொல்ல நினைக்கிறாரோ அத கோர்ட்ல சொல்லச் சொல்லு. அவரையெல்லாம் பார்க்கவே பிடிக்கலை. அவரை கண்ணாலே பார்க்க விருப்பமில்லை. போ. போ. போகச் சொல்லு” எனக் கூறி சந்திக்க மறுத்து விட்டார். இதை கணபதியா கமிசனில் சாட்சியம் அளித்த நாகை எஸ்.எஸ்.பாட்சா பதிவு செய்துள்ளார்.

கோபால கிருஷ்ண நாயுடு விடுதலை ஆன சில ஆண்டுகளுக்குப் பிறகு தியாகிகள் நினைவிடத்திற்கு அருகில் வெட்டிக் கொல்லப்பட்டார். அந்தக் கொலைத் தொடர்பாக காவல் துறை 12 பேரைக் கைது செய்தது. அதில் 9 பேர் திராவிடர் கழகத்தைச் சேர்ந்தவர்கள். அதில் கைதான ‘காவலாக்குடி மதி’ இன்னும் உயிரோடு இருக்கிறார். குடந்தை ஆ.பி.எஸ்.ஸ்டாலின் அவர்களின் சீரிய முயற்சியால்தான் வழக்கில் கைது செய்யப்பட்ட திராவிடர் கழக இளைஞர்களுக்காக நாகப்பட்டிணம் நீதிமன்றத்திலும்,சென்னை உயர் நீதி மன்றத்திலும் வழக்குகளை நடத்தி அவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.

ஆக, கலவரத்திற்கு முன்பும், பின்பும் திராவிடர் கழகமும், பெரியாரும் ஒரு போதும் ஆதிக்கச் சாதியினர்க்கு ஆதரவாக இல்லை!

*சேகர் குப்தாவின் துணிச்சலான கட்டுரை*

# ஊழலிலும் பார்ப்பனருக்கு ஒரு நீதி; ‘தலித் சூத்திரருக்கு’ வேறு நீதி



‘பார்ப்பனர்’ ஊழலுக்கும் - ‘சூத்திரம் பஞ்சமர்’ ஊழலுக்கும் வேறுபாடு உண்டு. மனு சாஸ்திரம் கட்டளையிடுவதுபோல ‘பிராமண ஊழலு’க்கு பரிசும், சூத்திர ஊழலுக்கு தண்டனையும் காத்திருக்கிறது. இங்கே வெளியிடப்பட்டுள்ள கட்டுரையின் ஆசிரியர் சேகர் குப்தா பல்வேறு ஆங்கில ஊடகங்களில் கட்டுரை எழுதி வரும் பிரபலமான மூத்த பத்திரிகையாளர். ஊழலுக்கும் ஜாதிக்கும் உள்ள தொடர்பை மிக்க துணிச்சலோடு அம்பலப் படுத்தியிருக்கார் சேகர் குப்தா.

அரசியலில் ஊழல்களுக்கும் சாதிகளுக்கும் என்ன தொடர்பு ?

ஊழலுக்கும் குற்றச் செயல்களுக்கும் சாதியோ, சமூகமோ நேரடித் தொடர்பில் உள்ளனவா ? சாதிப் படிநிலையில் கீழே செல்லச் செல்ல ஊழல் வழக்குகளில் பிடிபடுவதும், தண்டிக்கப் படுவதும் அதிகமாகிறதா ? சில உண்மைகளை ஆராய்வோம்.

அலைக்கற்றை ஒதுக்கீட்டில் முறைகேடுகள் நடந்ததாகத் தொடரப்பட்ட வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட ஆ. ராசா 15 மாதங்களுக்கு சிறையில் விசாரணைக் கைதியாக இருந்தார். 6 ஆண்டுகள் விசாரணைக்குப் பிறகு வழக்கிலிருந்து விடுவிக்கப் பட்டுள்ளார். அவர் தலித். இதே வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்ட கனிமொழி பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர். நிலக்கரி ஊழல் வழக்கில் சமீபத்தில் தண்டனை விதிக்கப்பட்ட மது கோடா, இலஞ்சம் - கொலை ஆகிய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட சிபு சோரன் ஆகியோர் பழங்குடி வகுப்பினர். உத்தர பிரதேச முன்னாள் முதல்வர் மாயாவதி தலித். லாலு பிரசாதும் முலாயம் சிங்கும் யாதவ சமூகத்தைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்டவர்கள். அவ்விருவரும் ஊழல் செய்ததாகவும் வருமானத்துக்குப் பொருந்தாத வகையில் சொத்து சேர்த்ததாகவும் வழக்குகளுக்கு உள்ளானவர்கள். (இப்போது லாலு மீண்டும் தண்டிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுவிட்டார்)

ஊழல் வழக்கில் மேல் சாதிக்காரர்களும் சிக்காமல் இல்லை. சுக் ராம், ஜெயலலிதா, சுரேஷ் கல்மாடி முக்கியமானவர்கள். இவர்களைப் போன்ற மேல் சாதிக்காரர்கள் பிடிபடுவது மிகவும் குறைவு. சுக் ராமின் கட்டிலிலிருந்தே கட்டுகட்டாக ரூபாய் நோட்டுகள் கைப்பற்றப்பட்டும், அவருக்குத் தண்டனை விதிக்கப்பட்டும், அவர் சிறைக்கே செல்லவில்லை. இப்போது சுக் ராமுக்கு வயது 90. பாஜகவில் சேர்ந்து புதுவாழ்வு பெற்றுவிட்டார். தேர்தல் நேரத்திலேயே அவர் கட்சி மாறினார். அவருடைய மகன் அனில் இப்போது இமாச்சல பிரதேச பாஜக சட்டப் பேரவை உறுப்பினர். அமைச்சராகக் கூட வாய்ப்பு இருக்கிறது. ஆ. ராசாவுக்கோ அவருடைய குழந்தைகளுக்கோ இப்படிப்பட்ட அதிருஷ்டம் கிடைக்கும் என்று நம்புகிறீர்களா ?

என்னடா இவர் ஊழல் வழக்கில் கூட சாதி பார்த்து எழுதுகிறாரே என்று கோபத்தில் நீங்கள் கொதிப்பீர்களே யானால், அதற்கு முன், நான்கு அம்சங்களைக் கவனத்தில் கொள்ளக் கோருகிறேன்.

முதலாவதாக, சுக் ராமும் ராஜாவும் தகவல்தொடர்புத்துறை அமைச்சர்களாக இருந்தபோதே ஊழல் செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இரண்டாவதாக, சுக் ராம் குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்டது, ராஜா இப்போது வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். மூன்றாவதாக, முதலாமவர் வீட்டில் கட்டிலில் படுக்கைக்கு அடியிலிருந்து ரொக்கம் கைப்பற்றப்பட்டது. மற்றொருவர் விஷயத்தில் பணம் எங்கே என்று நீதிபதியே எகத்தாளமாகக் கேட்கிறார் ? பணம் இல்லை என்றால் ஊழல் எங்கிருந்து வந்தது ? என்று கேட்டுவிட்டு வழக்கிலிருந்து விடுவிக்கிறார்.

இப்போது நாலாவதும் முக்கியமானதுமான அம்சம். ‘சுக்ராம் பிராமணர்’. அவர் எங்கிருந்து வந்தது ? ஏதோ அந்த ஒரு முறை மட்டும் ஊழலில் ஈடுபட்டிருக்கலாம்; மேல் சாதிக்காரர்கள் ஊழலே செய்ய மாட்டார்கள்; ஆ. ராசா பட்டியல் இனத்தவர். அவரிடம் ஊழல்களைத் தவிர வேறு என்ன எதிர்பார்க்க முடியும் ? அவர்களால் பதவியையும் பொறுப்பையும் வகிக்க முடியாது, வழக்கமாகவே சந்தேகத்துக்குரியவர்கள்’ என்பதே பொதுப்புத்தியாக இருக்கிறது !

இனி, பாஜகவுக்குள் இரு வேறு ஊழல் சம்பவங்கள் எப்படிக் கையாளப்பட்டன என்று ஆராய்வோம். அக் கட்சியின் இரு வேறு மூத்த தலைவர்கள் ஆளுங்கட்சியாக இருந்தபோது அரசின் மூலம் ‘எதையோ செய்து தருவதற்காக’, மறைத்துவைக்கப்பட்ட கேமரா எதிரில் லஞ்சம் வாங்கினார்கள். 2003-ல் திலீப் சிங் ஜுதேவ் ரூ.9 லட்சம் வாங்கினார். அந்த விவகாரம் வெளியான பிறகும் அவருக்குக் கட்சியில் மறுவாழ்வு தந்து மீண்டும் தேர்தலில் நிறுத்தப்பட்டு நாடாளுமன்றத்தில் கூட இடம் பெற்றுவிட்டார்.

இன்னொருவர் பங்காரு லட்சுமண். 2001-ல் ‘தெஹல்கா’ நிறுவன ஏற்பாட்டில், ஒரு செயலுக்குப் பரிந்துரை செய்வதற்காக ஒரு இலட்ச ரூபாயை மறைக்கப்பட்ட கேமரா எதிரில் வாங்கிக் கொண்டார். ஜுதேவ் இளைய அமைச்சர் என்றால் பங்காரு லட்சுமண் கட்சியின் தேசிய தலைவர். அத்துடன் அவர் தலித். கட்சி அவரைப் பதவியிலிருந்து இறக்கியது, அவரைத் தனிமைப் படுத்தியது. சிறைக்கு சென்ற பங்காரு லட்சுமண் தன் மீதான

(4ஆம் பக்கம்)

# மக்கள் போராளி முகிலனுக்கு குறி வைத்து நசுக்கும் காவல்துறை!

இயற்கை வளங்களை சுரண்டும் கும்பலுக்கு எதிராகவும் மக்களை பேரழிவுக்கு உள்ளாக்கும் அணுமின்சாரம், மீத்தேன் போன்ற திட்டங்களையும் எதிர்த்து மக்கள் போராட்டங்களை நடத்தி வரும் போராளி முகிலன் தொடர்ந்து காவல்துறையால் குறி வைத்து சித்திரவதைக்கும் முறைகேடான கைதுக்கும் உள்ளாகி வருகிறார். ஆனாலும், அவரது கொள்கை உறுதியை இந்த அடக்குமுறைகள் சித்திரவதைகள் அசைத்துக் கூட பார்க்க முடியவில்லை.

மக்கள் உரிமைக்காகப் போராடும் போராளிகளை காவல்துறையும் அரசும் எவ்வளவு மூர்க்கமாக ஒடுக்குகிறது என்பதை வெளிப்படுத்த புரட்சிப் பெரியார் முழக்கம் முகிலனின் இந்த கடிதத்தை வெளியிடுகிறது. போராளி முகிலன் ஒரு பொறியாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது பாளையங்கோட்டை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார் முகிலன். சிறையிலிருந்து நெல்லை மாவட்டம் வள்ளியூர் குற்றவியல் நடுவருக்கு (மாஜிஸ்திரேட்) சிறை அதிகாரி வழியாக அனுப்பிய கடிதம் இது:

“நான் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக தமிழகத்தின் இயற்கை வளங்கள் வரைமுறையற்று சூறையாடப்படுவதை எதிர்த்தும், தமிழகத்தின் தற்சார்பை பாதுகாக்கவும், மக்களின் கருத்துகளுக்கு எதிராக வளர்ச்சி என்ற பெயரில் கொண்டு வரப்படும் நாசகார ஆலைகளுக்கும் திட்டங்களுக்கும் எதிராக மக்களை திரட்டி போராடி வருபவன்.

தற்போது, ‘தமிழ்நாடு சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கத்தின்’ ஒருங்கிணைப்பாளராகவும், காவிரி ஆற்றில் தொடர்ந்து நடைபெற்று வரும் மணல் கொள்ளையை எதிர்த்து ‘காவிரி ஆறு பாதுகாப்பு இயக்கம்’ என்ற அமைப்பின் ஒருங்கிணைப்பாளராகவும் உள்ளேன். மதுரை மாவட்டத்தில் நடைபெற்ற கிரானைட் முறைக்கேட்டை ஆய்வு செய்ய சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதியரசர் எஸ்.கே. தவுல் அவர்களை கொண்ட அமர்வு அமைத்த ‘உ.சகாயம் இ.ஆ.ப.’ ஆய்வுக் குழுவிற்கு உடன் இருந்து பல்வேறு ஆதாரங்களையும் சாட்சி களையும் கொண்டு வர ‘கனிமவள முறைகேடு சகாயம் ஆய்வுக்கு ஆதரவு இயக்கம்’ என்ற அமைப்பை அமைத்து அதன் ஒருங்கிணைப் பாளராக ஓராண்டு காலம் உடன் இருந்து செயல்பட்டவன்.

நெல்லை மாவட்டத்தில் கூடன்குளம் அணுஉலை அமைக்கப்பட்டபோது அதை எதிர்த்து மக்களைத் திரட்டி தொடர்ந்து போராட்டங்கள் நடத்திய ‘கூடன்குளம் அணுஉலை எதிர்ப்புப் போராட்டக் குழு’வின் பொறுப்பாளராக இருந்து செயல்பட்டவன், செயல்பட்டு வருபவன். தற்போது டெல்டா மாவட்டத்தை அழிக்கத் துடிக்கும் மீத்தேன், ஹைட்ரோ கார்பன் பெட்ரோலியம், நிலக்கரி, பெட்ரோல் கெமிக்கல்’ எனப் பல்வேறு அபாயகரமான திட்டங்களை எதிர்த்து தொடர்ந்து செயல்பட்டு வருபவன். மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டுபவன்.

நான் தமிழக அரசின் பொதுப் பணித் துறையில் பொறியியல் கல்வி முடித்தவுடன் நான்காண்டு காலம் தொழில்நுட்ப உதவியாளராக பணிபுரிந்தேன்.

இந்த ஆண்டு ‘ஆனந்த விகடன்’ வார இதழ் தேர்ந்தெடுத்த ‘தமிழகத்தின் டாப் 10 மனிதர்களில் ஒருவராக சளைக்காத சமூகப் போராளி’ என நான் தேர்ந்தெடுக்கப்பட்டேன். இயற்கை வேளாண் அறிஞர் நம்மாழ்வாரால் அமைக்கப்பட்டுள்ள ‘வானகம் உயிர்சூழல் நடுவம்’ 2017ஆம் ஆண்டின் ‘சிறந்த சுற்றுச் சூழல் செயற்பாட்டாளர் விருது’ எனக்கு அளித்துள்ளனர். ‘இந்தியா டுடே’ (தமிழ்) வார இதழ் தமிழகத்தின் தலைசிறந்த 10 மனிதர்களில் ஒருவர் என 2015ஆம் ஆண்டில் தேர்ந்தெடுத்து ‘மண் காக்கும் போராளி’ எனவும் என்னை சிறப்பித்தது.

நான் எழுதிய 200 பக்கம் கொண்ட ‘தாதுமணல் கொள்ளை’ நூல் 2015ஆம் ஆண்டில் சிறந்த பசுமை நூலாக ‘தி இந்து’ தினசரி பத்திரிகை தேர்ந்தெடுத்தது.

எங்களுடைய தொடர்ந்த போராட்டத்தின் காரணமாக முறைகேடாகவும், சட்ட விரோதமாகவும், மக்களின் வாழ்வாதாரத்தையும் தமிழகத்தின் இயற்கையையும் அழிக்கக் கூடிய எண்ணற்ற திட்டங்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. தற்போது கரூர் மாவட்டத்தில் இயங்கி வந்த 12 மணல் குவாரிகளில் 10 மணல் குவாரிகள் அரசால் இரத்து செய்யப்பட்டுள்ளது. பெருந்துறை சிப்காட் வளாகத்தில் அமைக்கப்பட இருந்த அமெரிக்காவின் ‘கொக்கோ-கோலா’ ஆலைத் திட்டம் கைவிடப் பட்டது.

திருப்பூர், ஈரோடு, கரூர், நாமக்கல் மாவட்டத்தில் எண்ணற்ற சாய ஆலைகள், கீழ் பவானி அணையை முழுக்க விசமாக்கி வந்த மேட்டுப்பாளையம் சிறுமுகை, ‘விஸ்கோஸ் ஆலை’, நாமக்கல் மாவட்டத்தில் ‘பொன்னி எரிசாராய ஆலை’ என எண்ணற்ற இயற்கையை நாசப்படுத்தும் ஆலைகள் எங்களது தொடர்ந்த போராட்டங்களால் அகற்றப்பட்டுள்ளது. முறைகேடாக இயங்கிய பல தாதுமணல்,



ஆற்று மணல், கிரானைட் குவாரிகள் மூடப்பட்டுள்ளது.

சட்டத்திற்கு புறம்பான வகையில் காவல் துறையும், அரசும் மற்றவர்களும் செயல்படும்போது அதை எதிர்த்தும், அம்பலப்படுத்தியும், வழக்கு தொடுத்தும் ‘மனித உரிமை செயல்பாட்டாளராகவும் செயல்பட்டு வருகிறேன்.

இந்த நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டப் பிரிவு 51(ஏ) கூறுகிறபடி ஆறுகளை, குளங்களை, இயற்கையை பாதுகாக்க வேண்டி செயல்பட வேண்டியது. ஒவ்வொரு குடிமகனின் கடமை என்பதையும், பிரிவு 14, 19(ஏ), 21 கூறுகிறபடியும் செயல்பட்டு வருபவன்.

இதுபோன்ற மக்களுக்கான செயல்பாட்டின் காரணமாகவும், சட்டவிரோதமாக, முறைகேடாக செயல்படும் காவல்துறையினரை எதிர்ப்பதன் காரணமாகவும் கடந்த சில ஆண்டுகளில் பத்துக்கும் மேற்பட்ட முறை என்மீது கொலைவெறி தாக்குதலும், சட்டவிரோத கைது நடவடிக்கையும் மேற்கொண்டும் நான் உயிர் தப்பி வாழ்ந்து வருகிறேன்.

கூடன்குளம் அணுஉலை எதிர்ப்புப் போராட்டத்தில் நான் ஈடுபட்டிருந்தபோது தமிழக அரசு முதலில் போராட்டத்திற்கு ஆதரவு கொடுத்தும், பின்பு மார்ச் 19, 2012 அன்று தனது நிலைபாட்டை மாற்றிக் கொண்டது. அந்த நாளில் நான் ஈரோட்டில் இருந்து வள்ளியூர் நோக்கி தொடர்வண்டியில் வந்தபோது காவல்துறையினர் என்னை தொடர்வண்டியில் வைத்து ‘டி.கே.பாசு அவர்கள் கைதுசெய்யப்படும் போது பின்பற்ற வேண்டிய 11 வழிமுறைகள் என்பதை எதுவும் பின்பற்றாமல், கொடுமுடியில் நள்ளிரவில் கைது செய்தும், பின்பு திருநெல்வேலி கொண்டு வந்து 2 நாட்கள் சட்டவிரோதமாக மூன்றடைப்பு காவல் நிலையத்தில் அடைந்து வைத்திருந்ததையும் என்னை கூடன்குளம் காவல் ஆய்வவாளர் ராஜபால், விகேபுரம் காவல் ஆய்வாளர் பூமிநாதன், ஏ.ஆர். உதவி ஆய்வாளர் என்னை கொலை மிரட்டல் செய்தது பற்றியும் 21.3.2012 இரவு 9 மணிக்கு வள்ளியூர் குற்றவியல் நடுவர் முன்பு ஆஜர்படுத்தியபோது, நடந்ததை வாய் வழியாக நான் சொல்ல நீதிபதி அதை எழுத்துபூர்வமாக பதிவு செய்தார். பின்பு என்னை நீதிமன்றத்திலிருந்து சிறைக்குக் கொண்டு வரும்போது மேற்சொன்ன காவல் அதிகாரிகளுடன் நெல்லை குற்றப்பிரிவு ஆய்வாளர் முத்துக்குமார் அவர்களும் இணைந்து என்னை கொலை வெறியோடு தாக்கினார்கள். இது பற்றிய புகார் மாநில மனித உரிமை ஆணையத்தில் கொடுக்கப்பட்டு விசாரணையிலிருந்து வருகிறது.

கூடன்குளம் அணுஉலை போராட்டத்தின்போது அணுஉலை போராட்டக் குழு பொறுப்பாளர்கள் 31.1.2012 அன்று பேச்சுவார்த்தைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அழைப்பின் பேரில் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் சென்றபோது, “மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் உள்ளே வைத்து பத்திரிகையாளர், காவல்துறையினர் கண் முன்பே போராட்டக் குழு பொறுப்பாளர்களோடு வந்த என்னையும், பொறுப்பாளர்களையும் பா.ஜ.க. மற்றும் இந்து முன்னணியினர் பத்துக்கும் மேற்பட்டோர் சூழ்ந்து கொண்டு தாக்கினர். என்னை குறிப்பாக குறி வைத்து கல்லாலும், ஹெல்மெட்டாலும், கைகளாலும் தாக்கினர். உடன் வந்தவர்கள் சுற்றி வளைத்து மீட்டதால் சில காயங்களோடும், சில பாதிப்புகளோடும் உயிர் தப்பினேன். இது நெல்லை மாநகர காவல்துறையில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

8.5.2016 அன்று தேனி மாவட்டம் போடியில் முன்னாள் முதல்வரும், தற்போதைய துணை முதல்வருமான ஓ.பன்னீர்செல்வம், தேவாரம், நியூட்ரினோ திட்டத்திற்கு ஆதரவாகவும், தமிழகத்தில் சட்டவிரோதமாக தினமும் 90 ஆயிரம் லாரிகளுக்கு மேல் ஆற்றுமணல் கொள்ளையடிப்பதற்கு துணை நிற்பதாலும் அவரை தோற்கடிக்க வேண்டும்” என சட்டமன்ற தேர்தலின்போது பிரச்சாரம் செய்து வரும்போது போடி காவல் ஆய்வாளர் சேகர் என்பவர் காவலர்களோடு வந்து “ஓபிஎஸ் அவர்களை எதிர்த்து பிரச்சாரம் செய்து விட்டு உயிரோடு இங்கிருந்து போய்விடுவாயா?” எனக் கூறியும், “ஓபி.எஸ். என்ன, நீங்கள் பிரச்சாரம் செய்வதால் எவ்வளவு வருத்தத்துடன் உள்ளார் தெரியுமா?” எனக் கூறியும் போடி பேருந்து நிலையத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் முன்பு வைத்து என்னை கையாலும், தடியாலும் தாக்கினார். பின்பு என்னையும் அந்த இடத்தில் என்னுடன் இருந்த மூவரையும் கைது செய்து போடி காவல்நிலையம் கொண்டு வந்தார். பல்வேறு ஊடகங்களில் வெளியான கண்டனத்தால் போடி காவல் நிலையத்திற்கு வந்த பின் அங்கு வந்த போடி டி.எஸ்.பி. பிரபாகரன், “இந்த சம்பவத்திற்கு ஆய்வாளருக்காக நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். இதை பெரிதுபடுத்த வேண்டாம்” எனக் கூறி மாலை எங்களை விடுதலை செய்து அனுப்பி வைத்தார்.

23.1.2017 அன்று மதுரை மாவட்டம் அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டு கோரி நடைபெற்றப் போராட்டத்தில், போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர போராட்டத்தை ஒருங்கிணைத்து வந்த என்னை கைதுசெய்த காவல்துறையினர் மற்றவர்களுடன் வைக்காமல் தனியாக வைத்தனர். பின்பு என்னை மட்டும் தனியாக அழைத்துச்சென்று அலங்காநல்லூர் காவல்நிலைய ஆய்வாளர் அன்னராஜ், 30 காவலர்களை என்னை சுற்றி வளைக்க நிறுத்தி, தன் கையால் வைத்திருந்த தடியால் என்னை கொலை செய்யும் நோக்கோடு முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் அவர்களை போராட்டம் நடத்தி, அலங்காநல்லூருக்குள் வரவிடாமல் செய்து விட்டாயே, அலங்காநல்லூர் ஊரையே கெடுத்து விட்டாயே” எனக் கூறிக்கொண்டே என் தலையை நோக்கி தடியால் அடித்தார். நான் எனது கையை வைத்துதலையில் அடிபடாமல் மறைத்து தடுத்ததால் எனது கையில் பல இடங்களில் காயம் ஏற்பட்டது. உடல் முழுக்க தடியால் அடித்து பின்பு என்னை கைது செய்து வைத்திருந்தாலும் அது சட்ட விரோதமான முறையில் கைது என்பதால் கணக்கு காட்டவில்லை, என்னைக் காணவில்லை என பல காட்சி ஊடகங்களில், இணைய தளத்தில், சமூக வலைத்தளங்களில் செய்தி வந்த பிறகு 24.10.2017 பகலில் மதுரை ராசாசி மருத்துவமனையில் போலீஸ் காவலோடு சிகிச்சையில் இருந்த என்னை கைது செய்வதாகக் கூறி கைது செய்து அன்று இரவு விடுதலை செய்தார். அலங்காநல்லூர் ஆய்வாளர் மீது நடவடிக்கைக் கோரி 28.1.2017 அன்று மதுரையில் உள்ள பல்வேறு சமூக இயக்கங்கள், அரசியல் கட்சியாளர் ஆகியோருடன் இணைந்து சென்று மதுரை மாவட்ட நிர்வாக செயல்துறை நடுவரும், மாவட்ட ஆட்சித் தலைவருமான வீரராகராவ், இ.ஆ.ப.விடம் புகார் மனு கொடுத்தேன். இது விசாரணையில் உள்ளது. மேலும் ஜல்லிக்கட்டுப் போராட்டத்தில் நடைபெற்ற அத்துமீறல்கள் பற்றி ஆய்வு செய்ய அமைக்கப்பட்டுள்ள ‘நீதிபதி ராஜேஸ்வரன் குழு’விடமும் இது பற்றி புகாரை 2.5.2017 அன்று கொடுத்து அதுவும் விசாரணையில் இருந்து வருகிறது.

(தொடரும்)

## கோவையில், நூல் வெளியீட்டு விழா

“இருட்டினில் வாழும் வெளிச்சங்கள்” நூல் வெளியீட்டு நிகழ்வு 27.12.2017 புதன் கிழமை காலை 10.00 மணியளவில் கோவை அண்ணாமலை அரங்கத்தில் நடைபெற்றது. த.பெ.தி.க. பொதுச் செயலாளர் கோவை கு.ராமகிருட்டிணன் நூலை வெளியிட, கழகத் தலைவர் கொளத்தூர் மணி நூலை பெற்றுக்கொண்டார். தோழமை அமைப்புகளின் தலைவர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.



## கோவையில் முன்னாள் அமைச்சர் ஆ.ராசாவுக்கு வரவேற்பு



**27.12.2017** காலை கோவை வந்த முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.ராசாவுக்கு கோவை விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. வரவேற் பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, த.பெ.தி.க. பொதுச் செயலாளர் கு.ராமகிருட்டிணன் உள்ளிட்ட பெரியார் இயக்கத் தோழர்கள் கலந்து கொண்டு வரவேற்பளித்தனர். கழக அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி, பொருளாளர் திருப்பூர் துரைசாமி மற்றும் கழகத்தோழர்கள் வரவேற்பு நிகழ்வில் பங்கேற்றனர்.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# கழகத்திற்கு புதிய மின்னஞ்சல்

கழகத்தின் சார்பில் மாவட்ட, மாநகர, ஒன்றிய, கிளைக் கழகங்கள் நடத்தும் ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள், பொதுக் கூட்டங்கள், தெருமுனைப் பிரச்சாரங்கள், அறிவிப்புகள் மற்றும் பிற செய்திகள் ஆகியவற்றை செய்திகளாக கழகத் தலைமைக்கு எளிமையாக அனுப்ப தோழர்களின் வசதிக்காக ஒரு புதிய மின்னஞ்சல் முகவரி உருவாக்கப்பட்டுள்ளது. செய்திகள் அனுப்பும் பொழுது நிகழ்வுகளின் புகைப்படங்கள், நாள், நேரம், கலந்து கொண்ட அமைப்புகள், கலந்து கொண்ட பொறுப்பாளர்கள் ஆகிய விபரங்களை தவறாமல் குறிப்பிட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

கழகத்தின் செயல்பாடுகளை கழக இதழான பெரியார் முழக்கம்,கழக இணையம், கழக சமூக வலைத் தளங்கள் வாயிலாக மக்கள் மன்றத்தின் பார்வைக்கு கொண்டு செல்ல தாங்கள் அனுப்பும் செய்தி பெரிதும் உதவும். ஆதலால் கழக சார்பில் நடத்தப்படும் ஒவ்வொரு நிகழ்வுகளையும் தவறாமல் பதிவு செய்வதும் நிகழ்வின் ஓர் அங்கமே எனவே கீழ்காணும் மின்னஞ்சல் முகவரிக்கு தவறாமல் செய்திகளை அனுப்பி உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**newsdvk@gmail.com**

– திராவிடர் விடுதலைக் கழகம்

(முதல் பக்கத் தொடர்ச்சி)

இயல்பான ஒன்றாகிவிட்டது. தமிழ்நாட்டில் பாஜகவின் நிழலாட்சி நடப்பது போன்ற நிலை உருவாகி விட்டது. தமிழக ஆளுநர், தமிழக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியாக தன்னை கருதிக் கொண்டு, ஆளுநருக்கு உரிய சம்பிரதாயங்களை உதறி விட்டு மாவட்டம் மாவட்டமாக பயணம் செய்து மக்களைச் சந்திப்பதும், மாவட்ட அரசு அலுவல்களை ஆய்வு செய்வதுமாக இயங்கி வருகிறார். மக்கள் வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வர இயலாத பாஜக, இத்தகைய அதிகார அத்துமீறல்களால் தமிழ்நாட்டின் சமூக தனித்துவத்தை அழித்தொழித்து - இந்துத்துவ கொள்கைகளை செயல்படுத்த களங்களை உருவாக்கி வருவது வன்மையான கண்டனத்துக்குரிய தாகும். தமிழ்நாட்டின் நலனில் அக்கறையும் கவலையும் உள்ள அனைத்து கட்சிகள், இயக்கங்கள் இந்த அதிகார அத்துமீறலுக்கு எதிரான கண்டனங்களையும், இயக்கங்களையும் நடத்த முன்வரவேண்டும் என்று இந்த செயலவை கேட்டுக் கொள்கிறது

**ஆணவப் படுகொலை தடுப்புச் சட்டம்**

ஜாதி ஆணவப் படுகொலைகளைத் தடுக்க தனிச்சட்டம் இயற்ற வேண்டும் என்ற கோரிக்கையை தமிழ்நாடு அரசு தொடர்ந்து அலட்சியப்படுத்தி வருகிறது. உடுமலை சங்கர் படுகொலை வழக்கில் திருப்பூர் மாவட்ட அமர்வு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு அனைத்து தரப்பு மக்களாலும் வரவேற்கப்பட்டதைப் பார்த்த இந்த நிலையிலாவது ஜாதி ஆணவப் படுகொலைக்கு எதிரான தனிச்சட்டத்தினை உடனடியாக இயற்றவேண்டும் என தமிழக அரசினை இந்த செயவை வலியுறுத்துகிறது

**தலித் மாணவர்களுக்கு அநீதி**

கல்வி நிறுவனங்களில் பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர், கிறிஸ்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவர்களின் உயர்கல்வி செலவை அரசே ஏற்கும் வகையிலான கல்வி உதவித் திட்டம் 2012ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் அமல்படுத்தப்பட்டுவருகிறது. இத்திட்டத்தால் ஆண்டுதோறும் ஏறத்தாழ 1,50,000 மாணவர்கள் பயன்பெற்று வருகிறார்கள்.

ஆனால் இந்த ஆண்டு கல்வி உதவித் தொகையைக் குறைத்து தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அதே வேளை, சுயநிதிக் கல்லூரிகளில் கல்விக் கட்டணத்தை நிர்ணயம் செய்ய அமைக்கப்பட்ட ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி என்.வி.பாலசுப்பிரமணியன் தலைமையிலான குழுவானது, கடந்த ஆண்டு பொறியியல் பட்டப் படிப்புக்கு அரசு ஒதுக்கீட்டில் 40 ஆயிரமாக இருந்த கல்வி கட்டணத்தை 50 ஆயிரமாகவும், நிர்வாக ஒதுக்கீட்டில் 70 ஆயிரமாக இருந்த கல்வி கட்டணத்தை 85 ஆயிரமாகவும் உயர்த்தியுள்ளது

இந்த சூழலில், அரசு கல்வி உதவித் தொகையை ரூ 50000 ஆகக் குறைத்து அறிவித்துள்ளதால், மீதமுள்ள ரூ 35 ஆயிரத்தை மாணவர்களே செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் ஏராளமான மாணவர்கள் தங்கள் கல்வியைத் தொடரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது

எனவே தமிழ்நாடு அரசு, தாழ்த்தப்பட்ட, பழங்குடி மாணவர்களுக்கு ஏற்கனவே வழங்கி வந்ததைப் போல முழுகல்வி கட்டணத்தையும் தொடர்ந்து வழங்க உரிய ஆணைகளை உடனடியாக பிறப்பிக்க வேண்டும் என திராவிடர் விடுதலைக் கழகம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது

**தொடர் வண்டி நிலையத்தில் அம்பேத்கர் படமா?**

இந்தியாவை மதசார்பற்ற நாடு என இந்திய அரசியல் சட்டத்தின் முகப்புரையிலேயே கூறப்பட் டுள்ளது. ஆனால் அமைச்சர்களும், அதிகாரிகளும் தங்கள் மத உணர்வுகளை வெளிப்படுத்தும் இடமாக அரசு அலுவலகங்களை ஆக்கி வருவது அதிகரித்த வண்ணம் உள்ளது

1992ஆம் ஆண்டில் மத்திய அரசில் வீற்றிருந்த காங்கிரஸ் ஆட்சியில், நாடாளுமன்ற குழு சமூக கலவரங்களைப் பற்றி ஆய்ந்து, அரசு அலுவலகங்களிலும், இடங்களிலும் குறிப்பிட்ட மத சின்னங்களை வரைவதும், கருத்துக்களை பொறிப்பதும், மத வழிபாடுகள் நடத்துவதுமே முதன்மைக் காரணமாக அமைகிறது என சுட்டிக்காட்டியதைக் கருத்தில் கொண்டு மத்திய அரசின் உள்துறை, அனைத்து மாநில அரசுகளுக்கும் அவ்வாறான செயல்பாடுகளைத் தடுக்குமாறு அறிவுறுத்தியது. அதன் அடிப்படையில் தமிழ்நாடு அரசும் கண்டிப்பான சுற்றறிக்கையை அனுப்பியது

ஆனால் காஞ்சிபுரம் தொடர்வண்டி நிலையத்தில் அரசு அனுமதித்துள்ள டாக்டர் அம்பேத்கர் படத்தை அகற்றிவிட்டு, சங்கராச்சாரி படத்தை வரைந்த சட்ட விரோத நடவடிக்கையை மாற்றி, மீண்டும் அம்பேத்கர் படத்தை பழையபடி வைத்த காஞ்சி மக்கள் மன்றத் தோழர்கள் மீது வழக்குப் பதிவு செய்து நால்வரை சிறைப்படுத்தியுள்ளது. இந்நடவடிக்கையை திராவிடர் விடுதலைக் கழக செயலவை வன்மையாக கண்டிப்பதோடு, தமிழக அரசு உடனடியாக வழக்கைத் திரும்பப் பெறுவதோடு, சட்டவிரோத செயலில் ஈடுபட்ட தொடர்வண்டித்துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என வற்புறுத்துகிறது.

# ‘சுயமரியாதை சுடரொளி’ பொறிஞர் அம்புரோசு நினைவேந்தல் கூட்டம்



தூத்துக்குடி மாவட்ட கழகத் தலைவர் பொறிஞர் சி. அம்புரோசு, 2017 அக்டோபர் 26ஆம் நாள் சாலை விபத்தில் மரணம் அடைந்தார். அவரது நினைவைப் போற்றும் வகையில் தூத்துக்குடி மாவட்ட கழகம் சார்பில் கடந்த 2017 டிசம்பர் 17ஆம் நாள் தூத்துக்குடி மூவிபுரம் முத்து மகாலில் நினை வேந்தல் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் கோ.அ.குமார் தலைமை வகித்தார். ஆழ்வை ஒன்றியத் தலைவர் நாத்திகம் பா.முருகேசன், தூத்துக்குடி வே.பால்ராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மறைந்த சுயமரியாதை சுடரொளி பொறிஞர் சி. அம்புரோசு நினைவலைகளை, கழகத் தோழர்கள் செ. செல்லத்துரை, ச.கா. பாலசுப்பிரமணியன், குமரி மாவட்ட அமைப்பாளர் சேவியர் (எ) தமிழரசன், நெல்லை மாவட்ட அமைப்பாளர் சு. அன்பரசு, கீழப்பாவூர் ஒன்றியத் தலைவர் குறும்பை மாசிலாமணி, தமிழ்நாடு மாணவர் கழக அமைப்பாளர் கண்ணதாசன், தமிழ்நாடு அறிவியல் மன்ற பொறுப்பாளர் ச. தமிழன், சட்டக் கல்லூரி மாணவர் அர்ஜூன், எஸ்.டி.பி.அய். கட்சி மாவட்டப் பொருளாளர் எம்.மைதீன்கனி, கிறித்துவர் வாழ்வுரிமை இயக்க மாநில ஒருங்கிணைப்பாளர் பணி சுந்தரி மைந்தன், தமிழ்ப் புலிகள் சார்பில் கத்தார் பாலு, திராவிடர் கழக சார்பில் தி.ப. பெரியாரடியான் ஆகியோர் பகிர்ந்து கொண்டனர்.

அய்யா அம்புரோசு பேரன் புரட்சிகர இளைஞர் முன்னணி மலரவன் தனது அனுபவங்களை பகிர்ந்து கொண்டார். அதன்பின் தூத்துக்குடி பால். பிரபாகரன், அய்யா அம்புரோசுவின் அரசியல் பணி குறித்தும் அவரோடு பழகிய நினைவு களையும் சாதி ஒழிப்புக் களத்தில் அவர் ஆற்றிய பணியினையும் நினைவு கூர்ந்தார்.

சுயமரியாதை சுடரொளி பொறிஞர் சி. அம்புரோசு படத்தை கழகத் தலைவர் கொளத்தூர் மணி திறந்து வைத்தார். ஆதித் தமிழர் பேரவை நிறுவனத் தலைவர் இரா. அதியமான் மலர் தூவி வீரவணக்கம் செலுத்தினார். அவரது உரையில், அம்புரோசு அவர்களின் சாதி ஒழிப்புப் பணியினைக் கண்டு தான் மகிழ்ந்ததாகவும்,இதுதான் பெரியார் தொண்டனுக்கு அடையாளம் என்றும் புகழ்ந்துரைத்தார். அம்புரோசு அவர்களின் புதல்வன் அரசு, தனது தந்தையின் நினைவலைகளைப் பகிர்ந்து கொண்டார்.

நிறைவாக, கழகத் தலைவர் கொளத்தூர் மணி, அம்புரோசுவின் நற்பண்புகளை யும், கழகத்திற்கு அவர் ஆற்றிய பணிகள் குறித்தும் குறிப்பிட்டு, அவர் விட்டுச் சென்ற பணியினை தொய்வின்றி செய்வதே உண்மையான நினைவேந்தல். அதனை தோழர்கள் தொடர வேண்டும் என வேண்டுகோள் விடுததார். நிறைவாக ச. இரவிசங்கர் நன்றி கூறினார்.

நிகழ்வில் ஆழ்வை, கீழப்பாவூர், சூரங்குடி, கபாலி பாறை தோழர்களும், தூத்துக்குடி நகரம் மற்றும் குமரி தோழர்களும் அய்யா அம்புரோசு உறவினர்களும் திரளாகக் கலந்து கொண்டனர்.

**செய்தி : பால் பிரபாகரன்**

## சேலத்தில் கழக செயலவைக் கூட்டம்

திராவிடர் விடுதலைக் கழக செயலவைக் கூட்டம் 29.12.2017 அன்று சேலம் விஜயராகவாச்சாரியார் அரங்கில் பகல் 11.30 மணியளவில் தொடங்கியது. வரவேற்புரை - கோவிந்தராஜ், கடவுள் மறுப்பு - ஈரோடு மணிமேகலை. உரை நிகழ்த்தியோர்: ரத்தினசாமி (அமைப்புச் செயலாளர்) , வீ. சிவகாமி (த.நா. அறிவியல் மன்றம்), பாரி சிவகுமார் (தமிழ்நாடு மாணவர் கழகம்), விஜயகுமார் (இணையதள பொறுப்பாளர்), பரிமளராசன் (முகநூல் பொறுப்பாளர்), இராம. இளங்கோவன் (வெளியீட்டு செயலாளர்), தபசி குமரன் (தலைமை நிலையச் செயலாளர்), மற்றும் கழகப் பொறுப்பாளர்கள் சக்திவேல் (மேட்டூர்), பன்னீர் செல்வம் (சூலூர்), அய்யனார் (சென்னை), உமாபதி (சென்னை), மணிமேகலை, சண்முகப்பிரியன், சூரியக்குமார், நாத்திகஜோதி, சாமிநாதன், முத்துப்பாண்டி, முகில் ராசு, நீதியரசன், பாரதிதாசன், செந்தில் (விருதுநகர்), காமாட்சிபாண்டியன் (மதுரை), மருதமுத்து, அன்பு (நாகை), தாமோதரன் (பெரம்பலூர்), இளையரசன் (விழுப்புரம்), கிருஷ்ணன் (கிருஷ்ணகிரி), இரத்தினசாமி, வேழவேந்தன், செந்தில், டேவிட் (சேலம் கிழக்கு), வேணுகோபால் (பவானி), துரைசாமி (பொருளாளர்), மோகன் (மடத்துக்குளம்), வெள்ளியங்கிரி (பொள்ளாச்சி) ஆகியோர் தங்கள் கருத்துகளை முன் வைத்தனர். பிற்பகல் 6 மணியளவில் நிறைவடைந்தது.

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஊழல் வழக்கை தனியாக எதிர்த்துப் போராடி இறந்தும்விட்டார். ஜுதேவை ஆதரித்த கட்சி, பங்காரு லட்சுமணை ‘தீண்டத்தகாதவராகவே’ நடத்தியது. அதுதான் ஊழலுக்கும் சாதிக்கும் உள்ள தொடர்பு அல்லது வித்தியாசம் !

சாதி, நிறப் பாகுபாடு நிச்சயம் தொடர்கிறது; தண்டனை விதிக்கப்பட்டாலும் சுக் ராம் என்ற பிராமணரால் சிறைக்குப் போகாமலேயே தப்ப முடிகிறது; வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டாலும் ஆ.ராசாவைத் திருடனாகவே பார்க்கும் கண்ணோட்டம் தொடர்கிறது. ஜுதேவ் மறுவாழ்வு பெறுகிறார், பங்காரு லட்சுமண் விலக்கப்பட்டு, சாகவிடப்படுகிறார். இத்தகைய ‘இருட்டு சிந்தனைகளோடு’ உங்களுடைய விடுமுறை நாள்களைப் பாழ்படுத்துவதற்காக வருந்துகிறேன்; ஆனால் யதார்த்தம் என்ன என்பதை ஒப்பிட இதைவிடச் சிறந்த நேரம் வேறு இல்லை.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 4th January 2018

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN